

கலைஞர் 100 1924 - 2024

இன்றைய செய்தி நாளைய வரலாறு

# முரசொலி

Murasoli

www.murasoli.in நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி murasolidaily@gmail.com

தொடக்கம் : 10.8.1942 – முரசு : 82 – ஒலி : 317 – திருவள்ளுவர் ஆண்டு 2055 – ஆனி 13 – வியாழக்கிழமை 27 ஜுன் 2024 – சென்னை 16 பக்கங்கள் Established : 10.8.1942 - Volume : 82 - Issue 317 : Thiruvalluvar Year - 2055 - Aani 13 - Thursday 27 June 2024 - Chennai 16 Pages ₹ 5.00


# சாதிவாரிக் கணக்கெடுப்பு!

## பேரவையில் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தையடுத்து பிரதமருக்கு முதல்வர் மு.க.ஸ்டாலின் கடிதம்!

**சென்னை,ஜூன்.27-**

**முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் இந்தியாவில் சாதிவாரி மக்கள் தொகைக் கணக்கெடுப்பை உடனடியாகத் தொடங்க வேண்டிய தன் அவசியத்தை வலியுறுத்தி இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி அவர்களுக்கு நேற்று (26-6-2024) கடிதம் எழுதியுள்ளார்.**

**ஏற்கனவே எழுதியுள்ள கடிதம்!**

அக்கடிதத்தில், இந்தியாவில் சாதிவாரி மக்கள் தொகை கணக்கெடுப்பை உடனடியாக தொடங்க வேண்டியதன் அவசியத்தை சுட்டிக்காட்டியும், தாம் இதுகுறித்து ஏற்கெனவே 20.10.2023 அன்று கடிதம் எழுதியிருந்ததை குறிப்பிட்டு, அதில் சாதிவாரி மக்கள் தொகை கணக்கெடுப்புடன் பத்தாண்டு மக்கள் தொகை கணக்கெடுப்பை ஒருங்கிணைத்து மேற்கொள்ளவேண்டும் என்று வலியுறுத்தியிருந்ததையும் குறிப்பிட்டுள்ளார்.

இந்திய அரசியலமைப்பின் ஏழாவது அட்டவணையின் பதிவு-69 இல் "மக்கள் தொகை கணக்கெடுப்பு" ஒன்றிய அரசின் பட்டியலில் உள்ளதையும், மாநிலங்கள் / யூனியன் பிரதேசங்களில் மக்கள் தொகை கணக்கெடுப்பு நடவடிக்கைகள், மக்கள் தொகை கணக்கெடுப்பு சட்டம், 1948-இல் உள்ள விதிகளின்படி நடத்தப்படுவதையும், தற்போது, பட்டியல் இனத்தவர் மற்றும் பட்டியல் பழங்குடியினரின் சாதிவாரியான மற்றும் பழங்குடி வாரியான தரவுகள் மட்டுமே மக்கள் தொகை கணக்கெடுப்புச் சட்டம், 1948-இன் கீழ் கணக்கிடப்படுவதையும் தமது கடிதத்தில் குறிப்பிட்டுள்ளார்.

**சாதி அடிப்படையிலான சமூகப் பொருளாதார கணக்கெடுப்பு!**

நமது நாடு வளரும் நாடு என்ற முறையில், வளர்ச்சியின் பலன்கள் சமூகத்தின் அனைத்துப் பிரிவினரையும், குறிப்பாக விளிம்பு நிலையில் உள்ள மக்களைச் சென்றடைய வேண்டும் என்று தாம் கருதுவதாகவும், பின்தங்கிய மக்களின் சமூகப் பொருளாதார வளர்ச்சியை இலக்காகக் கொண்டு கொள்கைகளை வகுப்பதற்கும், மக்கள் தொகை கணக்கெடுப்புத் தரவுகள் எப்போதும் அடிப்படையாக இருக்கும் என்றும் குறிப்பிட்டுள்ளார்.

மேலும், இந்தியா போன்ற ஒரு நாட்டில், சமூகச் சூழல் என்பது பல்வேறு



சமூகங்களின் பொருளாதார முன்னேற்றத்தில் முக்கியப் பங்கு வகிப்பதைக் குறிப்பிட்டுள்ளார். சமூக முன்னேற்றத்திற்கான வாய்ப்புகளை வரலாற்று ரீதியாக நிர்ணயிக்கும் முக்கிய காரணியாக சாதி இருந்து வருவதால், சாதி அடிப்படையிலான சமூகப் பொருளாதார கணக்கெடுப்பு தரவுகள் பொதுக்களத்தில் கிடைக்கச் செய்வது அவசியம் என்றும் தனது கடிதத்தில் வலியுறுத்தியுள்ளார்.

**தீர்ப்புகளில் வலியுறுத்துல்!**

மேலும், பத்தாண்டுகளுக்கு ஒரு முறை மேற்கொள்ளப்படும் மக்கள் தொகை கணக்கெடுப்பு அறிக்கையிலிருந்து பெறப்பட்ட சரிபார்க்கக்கூடிய சமூகப் பொருளாதார குறியீடுகளின் அடிப்படையில் சட்டங்கள் இயற்றப்படும்போது, அவை சட்டப்பூர்வமாக செல்லுபடியாகும் தன்மையைப் பெறும்.

ஆயினும், 1931-இல் இந்தியாவில் நடத்தப்பட்ட சாதிவாரி கணக்கெடுப்புக்குப் பிறகு சமகாலத் தரவுகள் எதுவும் கிடைக்கவில்லை என்றும், பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் மற்றும் மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினரை வகைப்படுத்துவதற்கான உச்சநீதிமன்றத்தின் பல தீர்ப்புகளில், மாநிலத்தின் மொத்த மக்கள் தொகையில் உள்ள பல்வேறு சாதிகள், சமூகங்கள் மற்றும் பழங்குடியினரின் சமூகப் பொருளாதார மற்றும் கல்வி நிலை தொடர்பான அளவிடக்கூடிய தரவுகளின் தேவை வலியுறுத்தப்பட்டுள்ளது என்றும் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் சுட்டிக்காட்டியுள்ளார்.

**சட்டப்பேரவைத் தீர்மானம் இணைப்பு!**

எனவே, மேற்குறிப்பிட்ட அனைத்தையும் கருத்தில் கொண்டு, சாதிவாரி மக்கள் தொகை கணக்கெடுப்பை தேசிய பத்தாண்டு மக்கள் தொகை கணக்கெடுப்புடன் ஒருங்கிணைத்து, மக்கள் தொகை கணக்கெடுப்பு பணிகளை உடனடியாக தொடங்க வேண்டும் என ஒன்றிய அரசை தாம் வலியுறுத்திக் கேட்டுக்கொள்வதுடன், இது தொடர்பாக தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில் நேற்று (26-6-2024) ஒருமனதாக தீர்மானம் நிறைவேற்றப்பட்டதையும் குறிப்பிட்டு, தீர்மானத்தின் நகலை இணைத்து அனுப்பியுள்ளதாகவும், இதுகுறித்து இந்தியப் பிரதமர் அவர்கள் தனிப்பட்ட முறையில் தலையிட்டு நிறைவேற்றுவார் என்று தாம் எதிர்நோக்குவதாகவும் தம்முடைய கடிதத்தில் குறிப்பிட்டுள்ளார்.

---

### கள்ளக்குறிச்சி துயரச் சம்பவம்: உண்மையான அக்கறையுடன் அரசு நடவடிக்கை! ஆனால்

## அ.தி.மு.க. வீண் விளம்பரம் தேடுவதிலேயே முனைப்பாக உள்ளது!

### சட்டப்பேரவையில் முதல்வர் மு.க.ஸ்டாலின் குற்றச்சாட்டு!

சென்னை, ஜூன் 27 -

சட்டப்பேரவையில் பிரதான எதிர்க்கட்சியான அ.தி.மு.க. மக்களுக்கு ஆற்ற வேண்டிய ஜனநாயகக் கடமையை ஆற்றாமல், வீண் விளம்பரத்தைத் தேடுவதிலேயே முனைப்பாக உள்ளது எனவும் கள்ளக்குறிச்சியில் நடந்துள்ள துயரச் சம்பவம் குறித்து உண்மையான அக்கறையுடன் உரிய நட வடிக்கைகளை இந்த அரசு மேற்கொண்டிருக்கிறது என்றும் இதுதான் நமக்கும் அவர்களுக்கும் உள்ள வேறுபாடு என சட்டப் பேரவையில் அமளியில் ஈடுபட்ட அ.தி.மு.க.வினரைக் கண்டித்துப் பேசினார்.

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில் அமளியில் ஈடுபட்ட அ.தி.மு.க. உறுப்பினர்கள் அவையிலிருந்து வெளியேற்றப்பட்டதற்குப் பிறகு, தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் ஆற்றிய உரை வருமாறு :-

**முதலமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கள்ளக்குறிச்சி சம்பவம் தொடர் பாக எதிர்க்கட்சியினர், குறிப்பாக அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் எழுப்ப விரும்பும் கேள்விகள் தொடர்பாக பதிலளிக்க இந்த அரசு தயாராக உள்ளது என்று சட்டமன்றம் தொடங்கிய முதல் நாளிலிருந்தே தெளிவாக இந்த அவையில் தெரிவித்து வருகிறேன். தாங்களும் அதைத் தொடர்ந்து சொல்லிக் கொண்டிருக்கிறீர்கள்.

ஆனாலும், மக்கள் பிரச்சினையைப் பற்றி இப்பேரவையில் பேச வாய்ப்பளிப்பதாகத் தெரிவித்தும், அதை ஏற்க மனமில்லாமல், எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் வெளியில் சென்று பேசுவது என்பது இந்தப் பேரவையினுடைய மாண்புக்கும், மரபுக்கும் ஏற்புடைய செயல் அல்ல. பிரதான எதிர்க்கட்சியாகச் செயல்பட வேண்டிய அ.தி.மு.க. மக்களுக்கு ஆற்ற வேண்டிய ஜனநாயகக் கடமையை ஆற்றாமல், வீண் விளம்பரத்தைத் தேடுவதிலேயே முனைப்பாக உள்ளது. ஆனால், நாம் இந்தத் துயர சம்பவம் குறித்து உண்மையான அக்கறையுடன் உரிய நடவடிக்கைகளை இந்த அரசு மேற்கொண்டிருக்கிறது. இதுதான் நமக்கும், அவர்களுக்கும் உள்ள வேறுபாடு.

இவ்வாறு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் குறிப்பிட்டார்.

---

### டெல்லி உயர்நீதிமன்ற உத்தரவுக்கு எதிரான மனு:

## புதிய மனு தாக்கல் செய்ய கெஜ்ரிவாலுக்கு அனுமதி!

### அமலாக்கத்துறை கோரிக்கை நிராகரிப்பு!

புதுடெல்லி, ஜுன் 27 -

டெல்லி மதுபானக் கொள்கை தொடர்பான வழக்கில் சிபிஐ சிறப்பு நீதிமன்றம் அரவிந்த் கெஜ்ரிவாலுக்கு வழங்கிய ஜாமீனை டெல்லி உயர் நீதிமன்றம் இடைக்கால தடை விதித்தது. இந்த உத்தரவுக்கு எதிராக கெஜ்ரிவால் தரப்பில் உச்ச நீதிமன்றத்தில் மேல்முறையீட்டு மனு தாக்கல் செய்யப்பட்டது. இந்த மனுவானது உச்ச நீதிமன்றத்தில் நீதிபதிகள் மனோஜ் மிஸ்ரா மற்றும் எஸ்.வி.என்.பாட்டி ஆகியோர் அமர்வில் நேற்று விசாரணைக்கு வந்தது.

அப்போது கெஜ்ரிவால் தரப்பில் ஆஜரான மூத்த வழக்கறிஞர் அபிஷேக் மனு சிங்வி, 'இந்த விவகாரத்தில் டெல்லி உயர்நீதி மன்றம் இறுதி தீர்ப்பு வழங்கி விட்டதால், எங்களது மனு தானாகவே காலாவதி ஆகி விட்டது.

எனவே அதனை திரும்பப்பெற நீதிமன்றம் அனுமதிக்க வேண்டும்' என்று கோரிக்கை வைத்தார். ஆனால் இதற்கு அமலாக்கத்துறை தரப்பில் ஆஜரான சொலிசிட்டர் பி.வி.ராஜு கடும் எதிர்ப்பு தெரிவித்தார்.

அவரது கோரிக்கையை நிராகரித்த நீதிபதிகள், 'மதுபானக் கொள்கை விவகாரத்தில் டெல்லி உயர்நீதிமன்றம் வழங்கிய இடைக்கால உத்தரவுக்கு எதிராக தொடரப்பட்ட மேல்முறையீட்டு மனுவை கெஜ்ரிவால் தரப்பு திரும்பப்பெற அனுமதி வழங்கப்படுகிறது. இறுதி தீர்ப்புக்கு எதிராக புதிய மனு தாக்கல் செய்யவும் அனுமதி வழங்கப்படுகிறது' என்று உத்தரவிட்டு, முன்னதாக தாக்கல் செய்திருந்த மனுவை தள்ளுபடி செய்து வழக்கை முடித்து வைத்தனர்.

---

## என் மீது நம்பிக்கை வைத்த மக்களுக்கு நன்றி!

### ராகுல் காந்தி காணொலி பதிவு!



சென்னை,ஜுன்.27-

என் மீது நம்பிக்கை வைத்த மக்களுக்கு நன்றி என ராகுல் காந்தி தெரிவித்துள்ளார்.

மக்களவையில் எதிர்க் கட்சித் தலைவராக தேர்ந்தெடுக்கப்பட்டதற்கு காங்கிரஸ் தலைவரும், மக்களவை எதிர்க்கட்சித் தலைவருமான ராகுல் காந்தி நன்றி தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து ராகுல் காந்தி தன்னுடைய எக்ஸ் தளப் பக்கத்தில் வெளியிட்டுள்ள காணொலி பதிவில், "என் மீது நம்பிக்கை வைத்த நாட்டு மக்களுக்கும், காங்கிரஸ் தொண்டர்களுக்கும், இந்திய சகோதரர்களுக்கும் எனது மனமார்ந்த நன்றி.

எதிர்க்கட்சித் தலைவர் என்பது வெறும் பதவி மட்டுமல்ல. உங்கள் குரலாக மாறி உங்கள் நலன்களுக்காகவும் உரிமைகளுக்காகவும் போராடுவது மிகப்பெரிய பொறுப்பாகும்.

ஏழைகள், தாழ்த்தப்பட்டோர், சிறுபான்மையினர், விவசாயிகள், தொழிலாளர்கள் ஆகியோரின் மிகப்பெரிய ஆயுதம் நமது அரசியலமைப்புச் சட்டம், அதன் மீதான ஒவ்வொரு தாக்குதலுக்கும் முழு பலத்துடன் பதிலடி கொடுத்து அதைப் பாதுகாப்போம். நான் உங்களுடையவன், உங்களுக்காக மட்டுமே..!" எனக் குறிப்பிட்டுள்ளார்.

---

### பிரதமர் - எதிர்க்கட்சித் தலைவர் ராகுல்காந்தி இருக்கையில் அமர வைத்தனர்

## மக்களவை சபாநாயகராக ஓம் பிர்லா தேர்வு!

### தி.மு.க. சார்பில் மக்களவை கழகக் குழுத் தலைவர் டி.ஆர்.பாலு வாழ்த்து!

புதுடெல்லி, ஜுன் 27 –

மக்களவை முன்னாள் சபாநாயகரும், ராஜஸ்தான் மாநிலம் கோட்டா தொகுதி பா.ஜ.க. எம்.பி.யுமான ஓம் பிர்லாவும், கேரள மாநிலத்திலிருந்து 8வது முறையாக மக்களவைக்கு தேர்ந்தெடுக்கப்பட்ட காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்த மாவேலிக்கரை எம்.பி. கொடிக்குன்னில் சுரேஷும் மக்களவை சபாநாயகர் பதவிக்கு மனுத்தாக்கல் செய்திருந்தனர். இந்நிலையில், நேற்று காலை மக்களவை சபாநாயகருக்கான தேர்தல் நடைபெற்றது. இதில், ஓம் பிர்லாவை பிரதமர் மோடி முன்மொழிய, தேசிய ஜனநாயக கூட்டணி கட்சியினர் வழிமொழிந்தனர். இதேபோல், கொடிக்குன்னில் சுரேஷை இந்தியா கூட்டணி சார்பில் நாடாளுமன்ற தி.மு.க. குழுத் தலைவர் கனிமொழி கருணாநிதி, தேசியவாத காங்கிரஸ் கட்சி எம்.பி. சுப்ரியா சுலே உள்ளிட்டோர் முன்மொழிந்தனர். கூட்டணி கட்சியினர் வழிமொழிந்தனர்.

இதனையடுத்து குரல் வாக்கெடுப்பு நடத்தப்பட்டது. இதில், ஓம் பிர்லா மீண்டும் மக்களவை சபாநாயகராக தேர்ந்தெடுக்கப்பட்டதாக, தற்காலிக சபாநாயகர் அறிவித்தார்.

இதனையடுத்து சபாநாயகர் ஓம் பிர்லாவை, பிரதமர் மோடியும், எதிர்க்கட்சித் தலைவர் ராகுல் காந்தியும், நாடாளுமன்ற விவகாரத்துறை அமைச்சர் கிரண் ரிஜிஜுவும் அழைத்துச் சென்று சபாநாயகர் இருக்கையில் அமர வைத்து வாழ்த்துத் தெரிவித்தனர்.

**இந்தியா கூட்டணி குற்றச்சாட்டு!**

மக்களவை சபாநாயகர் பதவி ஆளுங்கட்சிக்கும், துணை சபாநாயகர் பதவி எதிர்க்கட்சிக்கும் வழங்கப்படுவது வழக்கம். ஆனால், கடந்த 10 ஆண்டுகால பா.ஜ.க. ஆட்சியில் துணை சபாநாயகர் பதவி எதிர்க்கட்சிக்கு வழங்கப்படவில்லை. 18வது மக்களவையிலும் துணை சபாநாயகர் பதவியை எதிர்க்கட்சிக்கு வழங்க பா.ஜ.க. கூட்டணி அரசு மறுத்துவிட்டது. சபாநாயகர் நியமனத்தில் எதிர்க்கட்சிகளுடன் ஒன்றிய அரசு ஆலோசனை நடத்தவில்லை என இந்தியா கூட்டணி குற்றஞ்சாட்டியது.

இந்நிலையில், மக்களவை சபாநாயகர் பதவிக்கு ஆளும் கட்சியும், எதிர்க்கட்சியும் வேட்பாளர்களை அறிவித்ததால் 48 ஆண்டுகளுக்கு பிறகு இப்பதவிக்கு தற்போது தேர்தல் நடைபெற்றுள்ளது. கடைசியாக 1976 ஆம் ஆண்டு மக்களவை சபாநாயகர் பதவிக்கு தேர்தல் நடைபெற்றது குறிப்பிடத்தக்கது.

**ராகுல் காந்தி வாழ்த்து!**

இந்தியாவின் குரலை நாடாளுமன்றத்தில் ஒலிக்க அனுமதிக்க வேண்டும் என்று மக்களவை சபாநாயகருக்கு, எதிர்க்கட்சித் தலைவர் ராகுல்காந்தி வலியுறுத்தியுள்ளார்.

புதிய சபாநாயகருக்கு வாழ்த்துத் தெரிவித்து அவையில் உரையாற்றிய எதிர்க்கட்சித் தலைவர் ராகுல்காந்தி, இந்திய மக்களின் குரலை எதிர்க்கட்சிகள் எதிரொலிக்கும் என்று தெரிவித்தார். எதிர்க்கட்சியின் குரலை அனுமதிக்காமல் நாடாளுமன்றத்தை நடத்துவது ஜனநாயகத்திற்கு எதிரானது எனக் குறிப்பிட்ட ராகுல் காந்தி, எதிர்க்கட்சிகளின் குரலை நாடாளுமன்றத்தில் உரிய முறையில் அனுமதிக்க வேண்டும் என கேட்டுக்கொண்டார்.

**டி.ஆர்.பாலு வாழ்த்து!**

இதனைத்தொடர்ந்து பேசிய மக்களவை தி.மு.க. குழுத்தலைவர் டி.ஆர்.பாலு, புதிய சபாநாயகராகத் தேர்வாகியுள்ள ஓம் பிர்லாவிற்கு தி.மு.க. மற்றும் தி.மு.க. தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் சார்பாக வாழ்த்துக்களை தெரிவித்தார்.

ஆளுங்கட்சி, எதிர்க்கட்சி என பாகுபாடு காட்டாமல் ஒன்றாகக் கருதி அவையை நடத்த வேண்டும் என டி.ஆர்.பாலு எம்.பி. கேட்டுக் கொண்டார்.